

ஸ்ரீவில்லிபுத்தூர்

# ஆண்டாள்கோவில் தங்கவிமான திருப்பணிக்கு 3 கிலோ தங்கம்

## வாஸ்து நிபுணர் ஆண்டாள் சொக்கலிங்கம் வழங்கினார்

ஸ்ரீவில்லிபுத்தூர் ஜுலை.27- ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் தங்க விமான திருப்பணி பல கோடி மதிப்பில் நடந்து வருகிறது. இதற்கு பக்தர்கள் தங்கம் வழங்கி வருகின்றனர். இந்தநிலையில் நேற்று வாஸ்துநிபுணர் ஆண்டாள் சொக்கலிங்கம் 3 கிலோ தங்கம் மற்றும் ரூ. 5 லட்சம் ரொக்கம் வழங்கினார். இதை கோவில் தக்கார் ரவிசந்திரன் பெற்று கொண்டார். இதில் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் தமிழக பக்தர்கள் கலந்து கொண்டனர். ஏற்கனவே ஆண்டாள் சொக்கலிங்கம் திருப்பணிக்காக 2 கிலோ தங்கம் வழங்கி உள்ளார். இதுகுறித்து அவர் கூறும்போது, இன்னும் 6 மாதத்தில் திருப்பணிக்காக 30 கிலோ தங்கம் என்ற இலக்கை எட்டி விடுவோம். தமிழகம் மற்றும் உலகம் எங்கும் ஆண்டாளுக்கு பக்தர்கள் உள்ளனர் என்றார்.

பின்னர் ஆண்டாள் கோவிலில் திருப்பணி நடக்கும் கோவில் கோபுர சிலைகளில் தங்கம் ஓட்டும் நிகழ்ச்சி நடந்தது.